**DM CUM JMC, THIRUPORUR, DATED 23.06.2026.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

முன்னிலை. **திரு.கா.நிலவரசன்,** B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.101/2025**

அசாருதீன், த/பெ.அன்சர் பாஷா – வாதி

–எதிராக–

ஷேக் பௌஜியா பானு, த/பெ.முனாப் – பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 10.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 17.06.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.அப்துல் மாலிக்** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.சைமன் டேவிட்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே 25.01.2021 அன்று நடைபெற்ற இஸ்லாமிய முறைப்படியான திருமணத்தை, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்ட 16.08.2025 தேதியிட்ட முபாரத் ஆவணத்தின் படி ரத்து செய்து கொண்டது செல்லதக்கது என்று விளம்புகை செய்ய கோரியும் மற்றும் தாவா செலவு தொகைக்காகவும் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வழக்குரை சுருக்கம்:–</u>** (இ.ம.எண்.1/2026, உத்தரவு நாள் 17.06.2025 படி திருத்தப்பட்டுள்ளது).

i. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 25.02.2021 அன்று இஸ்லாமிய முறைப்படி, ஆந்திர மாநிலம், வாக்காடு என்ற ஊரில் அமைந்துள்ள ஷாதி மன்சில் திருமண மண்டபத்தில் இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பலனாக இருவருக்கும் கடந்த 24.01.2022 அன்று சகானா என்ற மகள் பிறந்துள்ளார்.

ii. வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட மன

வேறுபாடுகள் காரணமாக இருவருக்கும் இடையே இருந்த திருமண உறவு பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக பிரதிவாதி கடந்த 24.01.2022 முதல் வாதியை விட்டு தனியே பிரிந்து வாழ்ந்து வருகிறார். இரு வீட்டு பெரியோர்கள் மூலமாக நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தை பலனளிக்காத நிலையில், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் கடந்த 3 ஆண்டுகளாக தனியே வாழ்ந்து வருகின்றனர்.

iii. எனவே, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் திருமண உறவை மீட்டெடுக்க முடியாது என்பதால் இருவரும் மனம் ஒத்து 16.08.2025 அன்று செங்கல்பட்டு மாவட்டம், கோவளத்தில் முபாரத் ஆவணம் மூலமாக தங்கள் திருமண உறவை சுமுகமாக முடித்து கொண்டார்கள். மேற்கண்ட ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது, வாதி பிரதிவாதிக்கு 11.08.2025 தேதியிட்ட கேளம்பாக்கம் கனரா வங்கியின் வரைவோலை எண்.903248 என்ற ரூ.10 லட்சத்திற்கான வரைவோலையை பிரதிவாதியின் பெயருக்கு அவருக்கும், அவரது இளவர் மகளுக்கும் சேர்த்து நிரந்தர பராமரிப்பு தொகையாக கொடுத்துவிட்டார்.

iv. பிரதிவாதியும் அவருடைய துணிமனிகள் மற்றும் நகைகள் ஆகியவற்றை வாதியிடம் இருந்து எவ்வித ஆட்சேபனையும் இன்றி பெற்றுக்கொண்டார். மேலும் வாதி திருமணத்தின் போது பிரதிவாதிக்கு கொடுத்த 10 சரவன் தங்க நகையையும் பிரதிவாதியே வைத்து கொள்ள சம்மதித்துவிட்டார். பிரதிவாதியும் வாதியிடம் இருந்து தனக்கோ, தன்னுடைய மகளுக்கோ அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதையும் பெறுவதில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

v. மேலும் பிரதிவாதி வாதிக்கு எதிராக கூடுர் கூடுதல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கு.வ.வ.எண்.5/2022 வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வது என்றும், தனக்காகவோ, தனது இளவர் மகளுக்காகவோ வாதியின் மீதோ அல்லது அவரது குடும்பத்தாரின் மீதோ எந்த நீதிமன்றத்திலும், எந்த வழக்கும் இனி வருங்காலங்களில் தாக்கல் செய்ய போவதில்லை என்று உறுதியளித்துள்ளார்.

vi. மேலும் பிரதிவாதி தனக்காவோ, தனது இளவர் மகளுக்காகவோ இனி

வரும் காலங்களில் எவ்வித பராமரிப்பும் கோர போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி, இளவர் சகானா பிரதிவாதியின் பராமரிப்பில் இருக்க வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பரிகாரம் கோரி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதி தரப்பு பதிலுரை சுருக்கம் –</u>

i. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 25.02.2021 அன்று இஸ்லாமிய முறைப்படி, ஆந்திர மாநிலம், வக்காத் என்ற ஊரில் அமைந்துள்ள ஷாதி மன்சில் திருமண மண்டபத்தில் இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பலனாக இருவருக்கும் கடந்த 24.01.2022 அன்று சகானா என்ற மகள் பிறந்துள்ளார்.

ii. வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட மன வேறுபாடுகள் காரணமாக இருவருக்கும் இடையே இருந்த திருமண உறவு பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக பிரதிவாதி கடந்த 24.01.2022 முதல்

வாதியை விட்டு தனியே பிரிந்து வாழ்ந்து வருகிறார். இரு வீட்டு பெரியோர்கள் மூலமாக நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தை பலனளிக்காத நிலையில், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் கடந்த 3 ஆண்டுகளாக தனியே வாழ்ந்து வருகின்றனர்.

iii. எனவே, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் திருமண உறவை மீட்டெடுக்க முடியாது என்பதால் இருவரும் மனம் ஒத்து 16.08.2025 அன்று செங்கல்பட்டு மாவட்டம், கோவளத்தில் முபாரத் ஆவணம் மூலமாக தங்கள் திருமண உறவை சுமுகமாக முடித்து கொண்டார்கள். மேற்கண்ட ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது, வாதி பிரதிவாதிக்கு 11.08.2025 தேதியிட்ட கேளம்பாக்கம் கனரா வங்கியின் வரைவோலை எண்.903248 என்ற ரூ.10 லட்சத்திற்கான வரைவோலையை பிரதிவாதியின் பெயருக்கு அவருக்கும், அவரது இளவர் மகளுக்கும் சேர்த்து நிரந்தர பராமரிப்பு தொகையாக கொடுத்துவிட்டார்.

iv. பிரதிவாதியும் அவருடைய துணிமணிகள் மற்றும் நகைகள் ஆகியவற்றை வாதியிடம் இருந்து எவ்வித ஆட்சேபனையும் இன்றி

பெற்றுக்கொண்டார். மேலும் வாதி திருமணத்தின் போது பிரதிவாதிக்கு கொடுத்த 10 சரவன் தங்க நகையையும் பிரதிவாதியே வைத்து கொள்ள சம்மதித்துவிட்டார். பிரதிவாதியும் வாதியிடம் இருந்து தனக்கோ, தன்னுடைய மகளுக்கோ அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதையும் பெறுவதில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

v. மேலும் பிரதிவாதி வாதிக்கு எதிராக கூடுர் கூடுதல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கு.வ.வ.எண்.5/2022 வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வது என்றும், தனக்காகவோ, தனது இளவர் மகளுக்காகவோ வாதியின் மீதோ அல்லது அவரது குடும்பத்தாரின் மீதோ எந்த நீதிமன்றத்திலும், எந்த வழக்கும் இனி வருங்காலங்களில் தாக்கல் செய்ய போவதில்லை என்று உறுதியளித்துள்ளார்.

vi. மேலும் பிரதிவாதி தனக்காவோ, தனது இளவர் மகளுக்காகவோ இனி வரும் காலங்களில் எவ்வித பராமரிப்பும் கோர போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே

ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி, இளவர் சகானா பிரதிவாதியின் பராமரிப்பில் இருக்க வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வாதி கோரிய பரிகாரம் படி தீர்ப்பாக வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வழக்குரை மற்றும் பதிலுரை ஆகியவை கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**எழுவினாக்கள் :**

1. வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு கடந்த 25.02.2021 அன்று நடைபெற்ற திருமணம், 16.08.2025 அன்று இரு தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட முபாரத் ஆவண படி முடித்து வைக்கப்பட்டதாக கோரப்படும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரம் என்ன ?

5. வாதி தனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக தன்னை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.ஆ.1 ஆக

விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. இத்தாவாவானது நிலுவையில் இருந்த போது வழக்குரை பரிகாரமானது திருத்தப்பட்ட நிலையில், திருத்தப்பட்ட பரிகாரம் சம்மந்தமாக எழுவினாக்கள் வனையப்படாததால், உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 14 விதி 5ன் படி எழுவினா 1 பின்வருமாறு திருத்தி வனையப்படுகிறது.

**<u>திருத்தப்ட்ட எழுவினா ;</u>**

1. வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே 25.01.2021 அன்று நடைபெற்ற இஸ்லாமிய முறைப்படியான திருமணத்தை வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்ட 16.08.2025 தேதியிட்ட முபாரத் ஆவணத்தின் படி ரத்து செய்து கொண்டது செல்லதக்கது என்று விளம்புகை செய்ய கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?

7. மேலே திருத்தி வனையப்பட்ட மேற்கண்ட எழுவினா குறித்து தீர்வு காண்பதற்கு இருதரப்பிலும் முன்னிறுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்களே போதுமானது என்பதால் கூடுதல் சாட்சிய சான்றாவணங்கள் தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8. இருதரப்பு வாதங்கள் கேட்க்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இருதரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் வாதம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, மேலே திருத்தி வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வு காண்கிறது.**

**திருத்தப்பட்ட எழுவினா –1**

9. வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே 25.01.2021 அன்று நடைபெற்ற இஸ்லாமிய முறைப்படியான திருமணத்தை, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்ட 16.08.2025 தேதியிட்ட முபாரத் ஆவணத்தின் படி ரத்து செய்து கொண்டது செல்லதக்கது என்று விளம்புகை செய்ய கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? என்ற எழுவினாவை கவனத்துடன் பரிசீலனை செய்ததில், வாதி தரப்பு வழக்கின் படி, வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இருவரும்

கடந்த 3 ஆண்டுகளாக தனித்தனியே பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், எனவே அவர்களுக்கு இடையே கடந்த 16.08.2025 அன்று இருவீட்டு பெரியோர்கள் முன்னிலையில் முபாரத் ஆவணம் ஏற்படுத்தி கொண்டதாகவும், எனவே மேற்கண்ட ஆவணமானது செல்லத்தக்கது என்று விளம்புகை செய்ய வேண்டும் என பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

10. பிரதிவாதியின் தரப்பில் வாதி தரப்பு வழக்கானது ஒப்புக்கொள்ளப்பட்டு, வாதி கோரியபடி தீர்ப்பு செய்யப்பட வேண்டும் என பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் தரப்பில் தனது தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் பொருட்டு, வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 25.02.2021 தேதியிட்ட திருமண அழைப்பிதழ், 25.02.2021 தேதியிட்ட ஆந்திர மாநிலம், விஜயவாடா வக்ஃபு வாரியத்தில் திருமணம் பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிட்ட நகல், திருமண புகைப்படம், 16.08.2025 தேதியிட்ட முபாரத் ஆவணம் அசல், வாதியின் ஆதார் அடையாள அட்டை ஒப்பீட்டு நகல் ஆகியவை முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. பிரதிவாதியின் தரப்பில் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டிருந்தாலும், அவர் தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

12. வாதியின் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே கடந்த 25.02.2021 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது. அவர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 16.08.2025 அன்று திருமண முறிவு சம்மந்தமாக வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே முபாரத் ஆவணம் ஏற்படுத்தி கொண்டுள்ளது தெரிய வருகிறது.

13. மேற்கண்ட வா.சா.ஆ.4 முபாரத் ஆவணத்தை கண்ணுற்றதில், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் எவ்வித வற்புறுத்தலும் இன்றி அவர்களாக இரு தரப்பு பெரியோர்கள் முன்னிலையில் மேற்கண்ட ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளதாகவும், அதன் படி வாதி பிரதிவாதியின் நிரந்தர பராமரிப்பிற்காக

ரூ.10 லட்சத்தை வரைவோலையாக பிரதிவாதியின் பெயருக்கு கொடுத்துள்ளதாகவும், அதனை பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், மேலும் திருமணத்தின் போது வாதி பிரதிவாதிக்கு கொடுத்த 10 சவரன் தங்க நகையை பிரதிவாதியே வைத்துக்கொள்வது என்றும், பிரதிவாதி வாதியிடம் இருந்து, தனக்காவோ, தனது இளவர் மகளுக்காகவோ எதிர்காலத்தில் எவ்வித பராமரிப்பு தொகையோ அல்லது அசையும் மற்றும் அசையா சொத்துக்களோ கோரப்போவது இல்லை என்றும், இளவர் மகளை இரண்டாம் பிரதிவாதியே பராமரித்து கொள்ள வேண்டும் என்றும் வாதிக்கு எதிராக பிரதிவாதி கூடுர் கூடுதல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கு.வ.வ.எண்.5/2022 வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வது என்றும் சங்கதிகள் காணப்படுகிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் வா.சா.1 மற்றும் பி.சா.1 ன் சாட்சியங்கள் அமைந்துள்ளது.

14. எனவே பிரதிவாதியே தன்னுடைய வழக்கின் மூலமாக மேற்கண்ட ஆவணம் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்டதாக ஒப்புகொண்டுள்ள நிலையில், வாதி தனது தரப்பு வழக்கை

உறுதிப்படுத்தியுள்ளதாக தீர்மானித்து வாதி கோரிய விளம்புகை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிக்கு ஆதரவாக இத்திருத்தப்ப்ட எழுவினா –1 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா –2</u>

15. வாதிக்கு கிடைக்ககூடிய வேறு பரிகாரங்கள் என்ன ? திருத்தப்பட்ட எழுவினா–1 ல் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு வேறு பரிகாரங்கள் ஏதும் கிடைக்கத்தக்கது அல்ல என்று இவ்வெழுவினா 2 ற்கு தீர்வு கண்டும், வழக்கின் தன்மையை பொறுத்து அவர் அவர் செலவு தொகைகளை வாதி மற்றும் பிரதிவாதியே ஏற்க வேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இத்தாவாவை செலவு தொகையின்றி அனுமதித்து, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே 25.01.2021 அன்று நடைபெற்ற இஸ்லாமிய முறைப்படியான திருமணத்தை, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்ட 16.08.2025 தேதியிட்ட முபாரத் ஆவணத்தின் படி ரத்து செய்து கொண்டது செல்லதக்கது என்று விளம்புகை**

**செய்து உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்த பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் (23.06.2026) இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.அசாரூதீன் (வாதி) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.02.2021 | திருமண அழைப்பிதழ் |
| வா.சா.ஆ.2 | – | ஆந்திர மாநிலம், விஜயவாடா, வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள திருமண பதிவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | – | திருமண புகைப்படம் |
| வா.சா.ஆ.4 | 16.08.2025 | முபாரத் ஆவணம் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | – | வாதியின் ஆதார் அடையாள அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | திரு.ஷேக் பௌஜியா பானு (வாதி) |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்**